CENTRE FOR POLICY ALTERNATIVES

2025 மார்ச் மாதம் 6ஆம் திகதி

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்
6/5, லயார்ட்ஸ் வீதி,
கொழும்பு 5
இலங்கை

கௌரவ. சரோஜா போல்ராஜ்
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்
5 ஆம் மாடி
செத்சிறிபாய கட்டம் II
பத்தரமுல்ல, இலங்கை

கௌரவ.அமைச்சர் அவர்கட்கு,

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, மகளிர் வலுவூட்டல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பாக சட்டம் மற்றும் கொள்கைவழி சீர்திருத்தங்களுக்கான உடனடி கவனத்தை செலுத்தக்கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) சார்பாக, நான் இக்கடிதத்தினை உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். குறிப்பாக இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் CEDAW (பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை) தலையீட்டின் போது, இலங்கையில் பெண்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் முன்னேற்றுவதற்கும் நீங்கள் மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கது. எவ்வாறாயினும், பல ஆண்டுகளாக நாடளாவிய ரீதியில் பல்வேறு சமூகத்தினருடன் இணைந்து பணியாற்றி அங்கு நாம் கண்டுணர்ந்த அடிப்படை யதார்த்தங்கலினடிப்படையில் இவ் விடயப்பரப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் அதிகம் உள்ளன.

இந்த தருணத்தில் உங்களது தலைமைத்துவத்துவமானது, இலங்கையில் பெண்கள் மற்றும் பாலின சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பல்வேறு வடிவங்களிலான பாதிப்புகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய பொறுப்பினை கொண்டுள்ளதென நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். இவ்விடயம் தொடர்பாக இவ்வாறான விளிம்புநிலை குழுக்கள் உள்ளிட இலங்கை பிரஜைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு எதிர்வரும் காலங்களில் தேவைப்படும் முக்கிய தலையீடுகளை எழுப்பக்கோரி கடந்த 2024 நவம்பர் மாதம் தொடக்கம் 2025 பெப்ரவரி மாதங்களுக்கு இடையில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமானது மேன்மைதங்கிய ஜனாதிபதி திசாநாயக்க மற்றும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் கௌரவ. ஹர்ஷன நாணயக்கார ஆகிய இருவரினுடைய கவனத்திற்கும் கொண்டுசென்றது.

பெண்கள் மற்றும் பிற விளிம்புநிலை குழுக்களுக்கு CPA மேற்கொண்டுவரும் தற்போதைய பணியானது, வலியுறுத்திவரும் சீர்திருத்த செயல்முறையை மேற்கொள்வதில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரை வெளிப்படையாக ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

வெவ்வேறு விதமான கருத்துக்களுக்கு கவனம் செலுத்தி உருவான கூட்டிணைந்த அணுகுமுறைகள் இந்த சீர்திருத்த முயற்சிகளின் செயல்திறன் மற்றும் நிலைபேண் தன்மையினை மேம்படுத்தும்.

இந்த விடயம் சம்பந்தமாக, தலையீடுகள் அவசியப்படும் என கருதும் பாலினம் மற்றும் பாலியல் உரிமைகளுடன் தொடர்புடைய பல விடயப்பரப்புக்களை CPA இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ளது. இந்த விடயப்பரப்புகள் பிரதானமான மூன்று பிரிவுகளிலான கட்டமைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன: **(1) சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைவகுப்பு ரீதியிலான தலையீடுகள், (2) நிலம், வாழ்வாதாரம் மற்றும் இயற்கை வளங்களுக்கான அணுகல் உள்ளிட்ட சமூக-பொருளாதார உரிமைகள் மற்றும் (3) பிரதிநிதித்துவம், நல்லிணக்கம் மற்றும் அடையாளம்**. எதிர்வரும் சட்டமியற்றல் மற்றும் கொள்கைவகுப்பு நிகழ்ச்சி நிரலில் மேற்குறிப்பிட்ட விடையப்பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு உங்களது அமைச்சகத்தை CPA வலியுறுத்திநிற்பதோடு, இலங்கையில் அனைத்து பொதுமக்களின் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் வகையிலான ஒரு நீதி கட்டமைப்பொன்றை உருவாக்க தீர்க்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் எதிர்பார்க்கிறது. மேலும், இவ்விடயங்கள் சம்பந்தமாக உங்களுடனான கலந்துரையாடலுக்கான ஒரு வாய்ப்பினையும் கோருவதுடன், மகளிர் வலுவூட்டல் மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு அவசியமான சட்ட சீர்திருத்தங்களை செயல்படுத்துவதனூடாக இலங்கையில் மாற்றமொன்றினை நோக்கி செல்வதற்கு எமது தொடர்ச்சியான ஆதரவை வழங்கவும் தயாராகவுள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதற்கான உங்களுடைய பதிலை எதிர்பார்ப்பதோடு, இந்த விடயம் தொடர்பிலான உங்களது உறுதியான நடவடிக்கைகளையும் எதிர்பார்க்கிறோம்.

உண்மையுள்ள,



கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து
நிர்வாக இயக்குனர்

## சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைவகுப்பு ரீதியிலான தலையீடுகள்

| சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைவகுப்பு ரீதியிலான தலையீடுகள் | |
|---|---|
| **அரசியலமைப்பு சீர்திருத்தங்கள்** | • நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல், பொறுப்புக்கூறலில் உயர்தன்மை மற்றும் மட்டுப்பாடுகள் மற்றும் இருப்புக்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட உரிமைகள் திருத்தச்சட்டம் உள்ளிட்ட முக்கிய கட்டமைப்பு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தும் புதியதோர் அரசியலமைப்பு. அரசியலமைப்பின் 16 வது உறுப்புரையினை நீக்குவதும் இதில் உள்ளடங்கும். |
| **பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை (SGBV) தொடர்பான தற்போது அமுலில் இருக்கும் சட்டங்களை சீர்திருத்தம் செய்தல்** | பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை (SGBV)[1] தொடர்பான தற்போதைய தண்டனைச் சட்டங்களை ஆராய்ந்து அவற்றை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம்.6 இவற்றில் அடங்குவன:<br>• பாலியல் வன்புணர்வு குற்றம் சம்பந்தமான பிரிவினை தண்டனைச் சட்டக்கோவையில் சீர்திருத்தம் மேற்கொள்வதனூடாக பாதிக்கப்பட்ட நபருக்கு உரிய பாதுகாப்பினை வழங்குதல்.<br>• கருக்கலைப்பினை குற்றமற்றதாக்குதல்.<br>• சர்வதேச தரங்களுக்கு இணங்க அந்தரங்கத்துகான உரிமை மற்றும் தனியாள் சுதந்திம் என்பன மதிக்கப்படுவதை உறுதிசெய்தல், குறிப்பாக வயதுவந்தவர்களுக்கிடையேயான ஒப்புதலுடன்கூடிய தனிப்பட்ட பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்கும் வகையில் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 365 மற்றும் பிரிவு 365A ஆகியனவற்றை நீக்குதல்.<br>• 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவதனூடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை மேம்படுத்துதல்.<br>• நிகழ்நிலை வடிவில் இடம்பெறும் SGBV வன்முறைகளுக்கு எதிராக தகுந்த விசாரணை செய்யவும், வழக்குத் தொடரவும் முடியுமான வகையில் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்.<br>• SGBV வன்முறைகளுக்கு எதிரான விரைவானதும் மற்றும் தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடர்வதனை அனுமதிக்கும் நடபடிமுறைச் சட்டங்களைப் புதுப்பிப்பதனூடாக, பாதிக்கப்பட்டவர்களின் மனஅதிர்ச்சி மற்றும் மீளவும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஆகியவற்றைக் குறைத்தல்.<br>• 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றங்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கு |

[1] பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்ப்பதற்கு அவசியமான சட்ட சீர்திருத்தம்" (CPA, நவம்பர் 2020) https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/Law-Reform-to-combat-SGBV-PART-1-General-Centre-for-Policy-Alternatives.pdf

| | |
|---|---|
| | உதவி மற்றும் பாதுகாப்பு வழங்கல் சட்டத்தினை சீர்திருத்தம் செய்து அமுல்படுத்துதல்.<br>• SGBV வன்முறை சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களை முறையாகக் அணுகுவதற்கும் கையாள்வதற்கும் சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு பயிற்சியினை வழங்குதல்.<br>• SG வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் எளிதாக அணுகக்கூடிய முறைப்பாட்டு வழிமுறைகளை உருவாக்குதல்.<br>• இலங்கையில் அதிகரித்துவரும் SGBV வன்முறைகளுக்கான வேரூன்றிய காரணங்களை ஆராய்தல் மற்றும் இவ்வாறான வன்முறை சம்பவங்களைத் தடுப்பதற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்.<br>• பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் தனிநபர்களைத் துன்புறுத்துவதற்கும் காவலில் தடுத்து வைப்பதற்கும் வழிவகுக்கும் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தினை சீர்திருத்தம் செய்தல். |
| **2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மற்றும் முன்மொழியப்பட்ட திருத்தங்கள்** | • 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தினை நீக்குவதோடு, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து பலதரப்பட்ட கண்ணோட்டங்களில் அமைந்த வகையிலானதும் அனைவரும் உள்வாங்கப்பட்ட மற்றும் வெளிப்படைதன்மையுடைய அவசரமின்றிய சீர்திருத்த செயன்முறையினை மேற்கொள்ளல்.[2] |
| **பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை பாதிக்கும் நுண்பாகநிதி, நுண்கடன் மற்றும் பிற கடன்கொடுத்தல் பொறிமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமியற்றல்/ கொள்கை சீர்திருத்தங்கள்** | • இலங்கையில் அனைத்து நுண்பாகநிதி மற்றும் நுண்கடன் வணிகத்திற்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகளில், ஒரு குறித்த தரநிலையை பேணுவதற்காக முன்மொழியப்பட்ட கடன் ஒழுங்குமுறை ஆணைய சட்டத்தை உடனடியாக அமுல்படுத்துதல். [3]<br>இலங்கையில் நுண்நிதி, நுண்கடன் மற்றும் பிற பணக்கடன்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் செயல்படுத்துவதற்கான செயற்திட்டத்துடனான ஒரு தேசிய கொள்கை கட்டமைப்பினை நிறுவுதல்.<br>• 2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நுண்பாக நிதிச் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம் உட்பட அல்லது எதிர்காலச் சட்டம்போன்ற நுண்பாக நிதி தொடர்பான விதிமுறைகளில் மொழி உரிமைகளை பேச்சுவார்த்தைக்குட்பட்டு மாற்றியமைக்க முடியாத வரன்முறையாக நிலைநிறுத்துதல். |

[2] "2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பான அறிக்கை" (CPA, பெப்ரவரி 2024) https://www.cpalanka.org/statement-on-the-online-safety-act-no-09-of-2024/

[3] "இலங்கையில் நுண்பாக நிதி உள்ளிட்ட கடன் வழங்கலின் ஒழுங்குமுறை பொறிமுறையின் அழுத்தமான தேவை பற்றிய சுருக்கமான கண்ணோட்டம்" (CPA,ஜனவரி 2023). https://citizenslanka.org/wp-content/uploads/2024/01/Micro-Finance-Policy-English.pdf

| | |
|---|---|
| | • மாவட்டச் செயலகங்களின் புள்ளிவிபரப் பிரிவு, மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பிராந்தியங்களின் அந்தந்த பிரதேச செயலகங்களுடன் இணைந்து தனிநபர்கள், குறிப்பாக நுண்பாக கடன் பிரச்சினைகள் அல்லது பிற நியாயமற்ற கடன் வழங்கும் பொறிமுறைகளில் சிக்கியுள்ள பெண்களின் ஆதாரங்களின் அடிப்படையிலான விரிவான மதிப்பாய்வினை மேற்கொள்ளல். |
| **1951 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் (திருத்தச்) சட்டத்தினை சீர்திருத்தம் செய்தல்** | • முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் (MMDA) சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமையளித்து, பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை உறுதிசெய்தல். |
| **மூக-பொருளாதார உரிமைகளுக்கான அணுகல்** | |

| | |
|---|---|
| **நிலம், வாழ்வாதாரம் மற்றும் இயற்கை வளங்களுக்கான அணுகல்** | • நில உரிமையில் பெண்களின் அணுகல், உரிமை மற்றும் நிலத்தின் மீதான கட்டுப்பாட்டை கொண்டிருப்பதனை உறுதி செய்தல்.<br>• நில உரிமைக்கான உத்தியோகபூர்வ ஆவணங்களை அணுகுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், குறிப்பாக முறையான சட்ட உரித்துடைமையின்றி தலைமுறை தலைமுறையாக நிலம் பயன்படுத்தப்பட்டுவரும் சமூகங்களில் அவற்றை ஆவணப்படுத்துவதற்கான செயல்முறை மற்றும் சட்ட ஆலோசனைகளுக்கு உதவும் வகையிலான நடமாடும் சேவைகளை நிறுவுவதும் இதிலடங்கும்.<br>• வாழ்வாதாரம், இயற்கை வளங்கள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கான உரிமையை பாதிக்கும் வகையிலான, குறிப்பாக பொருளாதார சுமைகளை தாங்குகின்ற பெண்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின், இராணுவம் மற்றும் பிறர் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள நிலங்களை விடுவித்தல்.<br>• பெண்களுக்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மூலப்பொருட்கள், விநியோக வழிகள் மற்றும் சந்தைகளை அணுக உதவும் வகையில் நீண்டகால தொடர் வழங்கல் ஆதரவை நிறுவுவதற்கு சிவில் அமைப்புக்கள் மற்றும் உள்ளூர் கூட்டுறவு அமைப்புக்கள் அல்லது வணிக அமைப்புக்களுக்கு இடையேயான பொதுவான கூட்டாண்மையினை உருவாக்குதல்.<br>• பெண்களை வேலைக்கு அமர்த்தும் வணிக நிறுவனங்களுக்கு மானியங்கள் மற்றும் வரிச் சலுகைகளை வழங்குதல் அல்லது பெண்களுக்கு சொந்தமான வணிக நிறுவனங்களிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல். |
| **தொழில் உரிமைகள்** | • நாகரிகமானதும் ஒழுக்கமானதுமான பணிச்சூழலில் தொழில் புரிவதற்கான பெண்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கும், பெண்களுக்கு பாதுகாப்பான பணியிடங்களை உறுதி செய்வதற்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகள் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதற்கும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.<br>• பெரும்பாலாக வீட்டுப் பணியாளர்களாக பணிபுரியும் பெண்களுக்கு நாகரிகமான தொழில் சூழலை உறுதி செய்வதற்காக வீட்டுப் பணியாளர்களின் உரிமைகளைக் கையாளும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் (ILO) உடன்படிக்கை எண். 189இல் திருத்தங்களை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>• பெண்களை வேலைவாய்ப்பில் ஈடுபட ஊக்குவிப்பதற்காக, பெண்கள் சந்தித்துவரும் ஊதியமற்ற பராமரிப்பு தொழில் சுமைகளை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த பராமரிப்பு கொள்கை அணுகுமுறை மற்றும் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துதல்.<br>• பெண்களுக்கு போதுமான தொழில் முனைவோர் திறன்களை வளர்த்துக்கொள்ளவும், அவர்களது வருமானத்தை வலுப்படுத்திக்கொள்ளும் பொருளாதார வாய்ப்புகளை அணுகவும், பொது-தனியார் |

| | |
|---|---|
| | கூட்டிணைந்த பொறிமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் பெண்கள் சுயதொழில் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளும் சூழலை உருவாக்குதல்.<br>• புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அவசியமான சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளை வலுப்படுத்துதல். மேலும், தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்லும் அனைத்து பெண்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் பல்வேறு அரசாங்க அமைச்சகங்கள் முழுவதும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள வகையிலான ஒருங்கிணைப்பு கட்டமைப்பொன்றை மேம்படுத்துதல் உள்ளிட்ட ஆதரவை வழங்குதல்.<br>• தொழிலுக்கு புலம்பெயர்ந்த்துச்செல்லும் தொழிலாளர்களின் வாக்குரிமையினை அங்கீகரிக்கும் வகையிலான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல். இவற்றில், தேர்தலின் போது புலம்பெயர் தொழிலாளர்கள் தாங்கள் வசிக்கும் நாட்டின் இலங்கை தூதரகத்தினூடாக பதிவு செய்வதற்கான பொறிமுறை மற்றும் தேர்தல் சமயத்தில் அவர்களுக்கும் வாக்களிக்க அனுமதியளிக்கும் வகையிலான முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இவற்றிற்குள் அடங்கும். |
| **பிரதிநிதித்துவம், நல்லிணக்கம் மற்றும் தனித்துவம்** | |
| **அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் தலைமைதத்துவம்** | • அரசியலில் அதிகளவான பெண்கள் ஈடுபாடுடன் பங்கேற்பதற்கான சூழலை உருவாக்குதல்.<br>• 2017 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருச்த்தச்) சட்டத்தின் மூலம் உள்ளூர் அதிகார சபை தேர்தலில் பெண்களுக்கு 25% இடஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது ஒரு சாதகமான ஏற்பாடு என்றாலும், அதன் செயல்திறனை உறுதிப்படுத்த வேண்டுமாயின் விழிப்புணர்வு மற்றும் வலுவூட்டல் செயற்திட்டங்களை மேற்கொள்வதும் அவசியமாகும்.<br>• 2018 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது மேற்குறிப்பிட்ட ஆசன ஒதுக்கீட்டை அமல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் இருந்தாலும் அதில் பல்வேறு சவால்கள் எழுந்தன. அரசியல் கட்சிகள் “போலி வேட்பாளர்களாக’ முன்னிறுத்தும் அறிக்கைகளால் இது போன்ற முயற்சிகளின் நேர்மைத்தன்மை மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.<br>மேலும், பெண்களின் பிரதிநிதித்துவமானது பெரும்பாலும் பாலின சமத்துவத்திற்கான உண்மையான அர்ப்பணிப்பாக வெளிக்காட்டப்படுவதனைக் காட்டிலும் பெயரளவுச் செயல்களாகவே உணரப்படுகின்றது. இதனால் இவ்வாறு அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பிரதிநிதித்துவத்திற்கான எதிர்கால திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமாயின், தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தொடர்ந்தும் நல்லெண்ணத்துடன் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவும், ஜனநாயக பொறிமுறையின் உயர்ந்த கட்டமைப்பினை நோக்கி செயல்படவும் தயாராக இருக்க வேண்டும். |

| | |
|---|---|
| **நல்லிணக்கம் மற்றும் அடையாளம்** | • காணாமற்போனோர் தொடர்பான சுயாதீன அலுவலகம் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறை போன்ற கட்டமைப்புச் சீர்திருத்தங்களுக்கு தீர்வு காணுதல் உட்பட வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் உண்மை மற்றும் நீதிவேண்டிய கோரிக்கைகளை நிவர்த்தி செய்தல்.<br>• நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்க பொறிமுறை முயற்சிகள் போன்றவற்றில் பாலின சமத்துவதென்பது ஒரு முக்கிய கருப்பொருளாகும். நேபாளம் மற்றும் கொலம்பியா போன்ற நாடுகளின் போருக்குப் பிந்தைய சூழல்களை ஒப்பிடுவதனூடாக, சீர்திருத்தங்கள் என்பது பாலின அடிப்படையில் அமைந்ததாக மேற்கொள்ளப்பட்டமையினை படிப்பினையாக கொண்டு எமது சூழலுக்கேற்ற வகையில் ஒருங்கிணைத்தல்.<br>• பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, கல்வி, உணவு, தண்ணீர் மற்றும் நிலம் போன்ற அடிப்படை உரிமைகளை தங்கள் அடையாளத்தின் காரணமாக அணுக முடியாது ஓரங்கட்டப்படும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பிற பலவீனமான குழுக்களைச் சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட விளிம்புநிலை குழுக்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகளை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தல்.<br>• பெண்கள், குறிப்பாக சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பெண்களின் இடைவெட்டு அடையாளங்களை மதிக்கும் பொறிமுறைகளை நிறுவுதல். |